பாண்டியன் கோவில் கலைகள் தமிழ் ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் ஆய்விதழ்

**Pandian Tamil Journal of Temple Studies**
*A Peer-Reviewed Journal*

**Volume 6, Issue 1, November 2025** **E-ISSN: 2583-0880**

# Pilgrimage Paradigm of Thirugnanasambandar

**K. Subala,** Ph.D. Research Scholar of Tamil, Reg. No.: 23PHTMF002,
Avinashilingam Institute for Home Science and Higher Education for Women, Coimbatore, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0009-0006-1510-7945**
**Dr. M. Geetha,** Assistant Professor of Tamil, Avinashilingam Institute for Home Science
and Higher Education for Women, Coimbatore, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0001-5310-7774**
**DOI: 10.5281/zenodo.19533284**

## Abstract

*Tamil Devotional Literature is rooted in spirituality. Saivism is an ancient tradition that reveres Lord Shiva as the supreme deity. It encompasses a distinct set of ideological, theoretical, philosophical and religious principles that transcend a large space of time. Thevaram is a revered collection of Tamil Saiva hymns. It was sung by the three esteemed saints - Thirugnanasambandar Appar and Sundarar. They travelled to many temples worshipping Lord Shiva with their unwavering devotion. Thirugnanasambandar was instrumental in extolling the excellence of the Saiva sect through his melodious Thevaram hymns and conveyed the divine thoughts of God and the philosophical thoughts of the tradition. He visited numerous sacred sites, such as the revered temples of Chidambaram, Thiruvannamalai, and Thiruchirappalli. He praised the architectural magnificence, spiritual significance and devotional passion of these holy places in his hymns. He promoted spiritual growth, social harmony and cultural preservation for the betterment of society. This article examines Thirugnanasambandar's journeys and devotion and highlights the durable legacy of his contributions.*

**Keywords:** *Thirugnanasambandar*, Saivam, Temples, Philosophy, *Pilgrimage*, Mukti

## References

[1] Sivagurunatha Pillai, M. *Thevaram Moovar Thalayathirai – Or Aayvu.* U. Subramaniyan Arakkattalai, 1990.
[2] Subbu Reddiar, N. *Gnanasambandar.* Vengadam Pathippagam, 1986.
[3] Selvarasu, Na. *Kovil Panpaadu.* Anicham Ilakkiya Vattam, 1999.
[4] Somasundaram, P. S. *Sambandar Kaattum Thiruthala Kaatchigal.* S. K. Pathippagam, 2019.
[5] Dharumai Adheenam (Pathippu Kuzhu). *Thirugnanasambandar Thevaram: Panniru Thirumuraigal (Muzhuvathum).* Gnanasambandham Pathippagam, 2023.
[6] Dharumai Adheenam (Pathippu Kuzhu). *Thirunavukkarasar Thevaram: Panniru Thirumuraigal (Muzhuvathum).* Gnanasambandham Pathippagam, 2023.
[7] Dharumai Adheenam (Pathippu Kuzhu). *Sundarar Thevaram: Panniru Thirumuraigal (Muzhuvathum).* Gnanasambandham Pathippagam, 2023.
[8] Nallasivam, K. P. "Nadunaattu Thiruppathigangalil Vazhipaadu." *Thirugnanasambandar Aayvumaalai*, vol. 1, 2002, pp. 331–335.
[9] Parameswari Ganesakambar. "Thirugnanasambandar Thevarangalil Isaiyanigal: Or Nokku." *Pranav Nunkalai Aayvithazh*, vol. 1, no. 4, March 2023, pp. 389–393.

[10] Maruthai, and Isaac Samuel. "Sundarar Thevarathil Kaanappadum Sivaneri Ozhukkangal." *Valar Tamil Aayvithazh*, vol. 2, no. 2, September 2021, pp. 14–29.
[11] Murugavel, N. R. (Urai Aasiriyar). *Sivagnanabodham (Theliporul).* Gnanasambandham Pathippagam, 2025.
[12] Ramanaraja, S. "Saivappanpaattu Marabil Thirugnanasambandarin Thalayathirai: Or Nokku." *Kalanjiyam Sarvadesa Tamil Aayvithazh*, vol. 5, special issue 5.1, December 2024, pp. 6–25.
[13] Venkatasami Nattar, N. M. (Urai Aasiriyar). *Kondrai Vendhan.* Gowra Pathippagam, 2021.
[14] Venkataramaiah, K. M. *Kalvettile Thevaram Moovar.* Sekar Pathippagam, 2005.
[15] Venkataraman, Su. *Indiya Ilakkiya Sirpigal: Thirugnanasambandar.* Sahitya Akademi, 2018.
[16] Sridhar, M. "Thalayathirail Thirugnanasambandarin Araneri." *Inam Palthurai Pannattu Inaiya Tamil Aayvithazh*, vol. 8, no. 32, November 2022, pp. 125–129.

**Author Contribution Statement:** NIL
**Author Acknowledgement:** Nil
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

பாண்டியன் கோவில் கலைகள் தமிழ் ஆய்விதழ்
*அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் ஆய்விதழ்*



**Pandian Tamil Journal of Temple Studies**
*A Peer-Reviewed Journal*
**Volume 6, Issue 1, November 2025** **E-ISSN: 2583-0880**

# திருஞானசம்பந்தரின் தலயாத்திரை நெறி

**க. சுபலா**, முனைவர் பட்ட ஆய்வாளர், பதிவு எண்: 23PHTMF002, தமிழ்த்துறை,
அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர், தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0009-0006-1510-7945**
**முனைவர் ம. கீதா**, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, அவினாசிலிங்கம் மனையியல்
மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர், தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000-0001-5310-7774**
**DOI: 10.5281/zenodo.19533284**

**ஆய்வுச் சுருக்கம்**

*தமிழ் பக்தி இலக்கியங்கள் சமயச்சார்புள்ளவை. உலகிற்கு முதற் பொருளாக விளங்கும் சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டது சைவ சமயம். காலத்தால் வரையறுக்க இயலாத சித்தாந்தக் கோட்பாட்டுத் தத்துவங்களையும் சமயநெறிகளையும் தன்னகத்தே கொண்ட சமயமாகும். செந்தமிழ் மறையாகிய 'தேவாரம்' சிவபெருமானை மனமுருகித் திருத்தலங்கள் தோறும் சென்று தேவார மூவரால் பாடப்பெற்றதாகும். சைவ சமயத்தின் சிறப்பையும் உயர்வையும் இறைவனின் அருட்சிந்தனைகளையும் தேவாரப் பாடல்கள் வழி நாளும் இன்னிசையால் பாடியவர் திருஞானசம்பந்தர். திருத்தலங்கள் தோறும் சென்று தேவாரம் அருளிச் செய்ததை முதன்முதலில் தொடங்கியவர் திருஞானசம்பந்தப் பெருமான் ஆவார். மெய்ஞ்ஞானத் தத்துவங்களையும் சமய உணர்வினையும் தொன்மையான புராணச் செய்திகளையும் தலங்களில் ஓவியங்களாகவும் சிற்பங்களாகவும் முன்னோர்கள் பொதிந்து வைத்துள்ளனர். அவை நிலை பெற்றிருக்கும் இடங்கள் வழிபாட்டுத் தலங்கள் எனப்படுகின்றது. இத்திருத்தலங்களின் சிறப்பினையும் பக்திநெறியினையும் சமய உணர்வினையும் தமது பதிகங்களில் சமுதாயம் மேன்மையடையப் பாடியவர். அவர்தம் தலயாத்திரைகளை ஆராய்ந்து அதன் பக்திநெறியினை அறிவதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது. இக்கட்டுரை தேவாரத் திருத்தலங்கள், யாத்திரையின் தொன்மை, திருஞானசம்பந்தரின் தலயாத்திரை முறைமை, திருத்தல யாத்திரைகள் ஆகிய தலைப்புகளின் கீழ் ஆராயப்பட்டுள்ளது வழங்கப்பட்டுள்ளது.*

**குறிப்புச்சொற்கள்:** *திருஞானசம்பந்தர்,* சைவம், திருத்தலம், மெய்ஞ்ஞானம், *யாத்திரை,* திருவடிப்பேறு.

**முன்னுரை**

இறைவன் நீக்கமற எங்கும் நிறைந்திருப்பவன். கடல் சூழ்ந்த இவ்வுலகிற்கு முழுமுதற் பொருளாக விளங்குபவன் சிவபெருமான். உயர்ந்த தத்துவங்களையும், தொன்மைகளையும், பக்தி நெறியினையும் கொண்ட சைவ சமயத்தினை உலகம் முழுவதும் நிலைநாட்டுவதற்கு சீகாழிப் பதியில் அவதரித்தவர் திருஞானசம்பந்தர். சைவசமய நெறியில் அவர் தம்முடைய இசையாலும் தமிழாலும் அக்காலத்து முறைகளுக்கு ஏற்றவாறு இறைவனை வழிபட வந்தவர். இதுவே திருத்தலயாத்திரைகளுக்கு அடிநாதமாக விளங்குகின்றது. வழிப்பாட்டு நெறியானது பின்னாளில் சமயநெறியாக மாறி பக்தி இயக்கத்தினை தோற்றுவிக்க உதவியதைக் காணமுடிகின்றது. சீகாழித் தலத்தினை மையமிட்டே திருஞானசம்பந்தரின் தலயாத்திரைகள் அமைந்ததுள்ளதை அவர்தம் பதிகங்கள் எடுத்துரைக்கின்றன. சமய வாழ்வு நெறியினை 'மூர்த்தி, தலம், தீர்த்தம்' என்னும் தொடர் உணர்த்துவதைக் கொண்டு ஆலய வழிபாட்டின்

சிறப்பினை அறிந்துகொள்ள முடிகின்றது. ஆலய வழிபாட்டினை சீர்பெறச் செய்வதற்காக ஆகமங்கள் இருந்ததுபோல திருமுறைகளும் எழுந்தன. முதல் மூன்று திருமுறைகளில் தேவாரத் திருத்தலங்களின் சிறப்பினையும் எல்லையில்லா பொருளான சிவபெருமானது குணங்களைப் பற்றிக் கூறுவதையும் காணமுடிகின்றது. இத்திருத்தல யாத்திரைகளின் நுட்பங்களையும் சமய உணர்வினையும் திருஞானசம்பந்தரின் பதிகங்கள் வழியாக ஆராய்கின்றது இக்கட்டுரை.

**திருக்கோயில் வழிபாடு**

கற்காலம் தொடங்கி மூத்த சமயமாக விளங்கும் சைவ சமயம் காலத்தால் மட்டுமே பழமையானதாக இல்லாமல் அதன் கோட்பாட்டுத் தத்துவங்களாலும் தொன்மையானதாக விளங்குகின்றது. உலகின் பல்வேறு பகுதிகளில் திருக்கோயில் அமைத்து வழிபடுவது பற்றி, **“ஆலயம் தொழுவது சாலவும் நன்று” (கொன்.வே., பா. 2)** என்று ஔவையார் குறிப்பிடுவதன் மூலம் அறியமுடிகின்றது. திருக்கோயில் என்னும் சொல்லிற்கு ஆலயம் என்றொரு பெயரும் உண்டு. கோயில் - கோ - கடவுள் (உறையும் இடம்) என்று பொருள் கொள்ளப்படுகின்றது. ஆலயம் என்ற சொல்லினை ஆ- ஆன்மா (ஆணவ மலம்) லயம் - சேர்வதற்குரிய இடம் (அடங்கி இருத்தல்) என பிரித்துப் பொருள் கொண்டால் இறைவன் திருவடியில் ஆன்மாவான உயிர் ஆணவ மலப்பற்றில்லாமல் லயத்திருக்கும் நிலையென பொருள் கொள்ளப்படுகின்றது. ஆலய வழிபாட்டின் முக்கியத்துவம் குறித்து, **“ஆலயந்தானும் அரனெனத் தொழுமே.” (சிவஞான., சூத். 12)** என்று வரும் சூத்திரத் தொடரின் மூலம் பிறவிப்பிணியில் அகப்பட்டு துன்பப்படும் உயிர்களின் வினையினை நீக்கி, ஆன்மா ஈடேற்றம் அடையும் பொருட்டு உதவுவதற்காக முன்னோர்கள் ஆலயங்களைக் கட்டுவித்தனர் என்பதை அறியமுடிகின்றது.

கோயில்கள் அறிவை வளர்க்கும் நிலையமாகவும், உயிர்களை நல்வழிப்படுத்தி அவர்களது வாழ்வினை மேம்படுத்தும் இடமாகவும், அறச்சாலைகளாகவும் இருந்துவந்துள்ளதைத் திருக்கோயில் தலவரலாற்றுப் புராணங்களும் திருமுறைப்பதிகங்களும் எடுத்துரைக்கின்றன. இதனால் முன்னோர்கள் பல்வேறு இடங்களில் கோயில்களை அமைத்து அங்கு தெய்வத்திருவுருங்களை எழுந்தருளச் செய்தனர். அக்கோயில்களில் திருவிழா, பூசை, ஆறுகால பூசை ஏற்படுத்தி நம் சிந்தனை இறைவனைச் சார்ந்து நிற்கும் நிலையாக மாற்றினர். இதன் மூலம் மனித சக்திக்கு மீறிய ஆற்றல் வெளிப்படுகின்றது. இதனை இறைசக்தி எனப் போற்றினர். இவற்றின் துணைக்கொண்டே மனித வாழ்வு மேன்மையடைந்ததைக் காணமுடிகின்றது.

**தேவாரத் திருத்தலங்கள்**

திருஞானசம்பந்தப் பெருமான் தாம் பெற்ற இறைக்காட்சி அனுபவத்தைத் தலங்களின் சிறப்புகளுடனும், தொன்மை வரலாற்றுக் கருத்துக்களுடனும் இணைத்துக்கூறி பதிகங்கள் பாடியுள்ளதைக் காணமுடிகின்றது. தேவாரத் திருத்தலங்கள் என்பவை முதல் மூன்று திருமுறைத் திருத்தலங்கள் ஆகும். இறைவனை வழிபடுவதே இவ்வுலகில் உயிர்கள் பெற்ற பயன் என்று அப்பர் சுவாமிகள் குறிப்பிடுகின்றார். இதற்காகவே திருத்தலங்கள் தோன்றின. தல யாத்திரை சைவ நெறிகளில் ஒன்றாகக் கருதப்படுகின்றது மூவர் முதலிகளும் மற்றும் நாயன்மார்களும் தலயாத்திரை மேற்கொண்டனர் என்பதைச் சேக்கிழார் பெருமான் திருத்தொண்டர் புராணத்தில் குறிப்பிடுகின்றார். சுந்தரர் தல யாத்திரை மேற்கொண்டது பற்றி,

> **திருத்தொண்டத்தொகையைத் தவிர்த்து ஏனைய எல்லாத் திருப்பாடல்களும் ஆலயத்து மூலவரை விளித்துப் பாடியன ஆகும். ஆலயம் சென்று சிவனை வழிபடுவது உண்மை நெறியாகும் என்றும் அதுவே தவமாகும் என்றும் திருச்சுழியல் ஆலயத்தில் பாடித் தொழுகிறார். (மருதை, ப. 27)**

Volume 6, Issue 1, November 2025 E-ISSN: 2583-0880

என்று மருதை அவர்கள் குறிப்பிடுவதன் மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது. நாடு, நகரம் தேடி சரியை நெறியில் நின்று இறைவனை வழிபடுதல் வேண்டும் என்பதை,

**நாடு நகரமும் நற்றிருக் கோயிலும்**
**தேடித் திரிந்து சிவபெரு மான்என்று**
**பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்**
**கூடிய நெஞ்சத்துக் கோயிலாய்க் கொள்வனே. (திருமந்திரம், பா. 5:2)**

என்ற பாடல் விளக்குவதைக் கொண்டு உள்ளம் பெருங்கோயிலாகும் என்பதை அறிந்துகொள்ள முடிகின்றது. தேவாரத் திருத்தலங்கள் மொத்தம் 274 ஆகும். சோழநாட்டுத் திருத்தலங்களை காவிரி வடகரைத் தலங்கள் - 63 தென்கரைத் தலங்கள் - 127 என இருவகையில் பகுப்பர். இவை 190 ஆகும். ஈழநாட்டுத் தலங்கள் 2, பாண்டிய நாட்டுத்தலங்கள் 14, மலைநாடு எனப்படும் கேரளாவில் ஒன்றும், கொங்கு நாட்டில் 7 திருத்தலங்களும் இருக்கின்றன. நடுநாட்டுத் தலங்கள் 22, தொண்டை நாடு 31 தலங்களைக் கொண்டதாகும். துளுவநாடு ஒன்றும் வடநாட்டுத் தலங்கள் மொத்தம் 5 ஆகும். சைவ நன்னெறி நாளும் தழைத்திடச் செய்வதற்காக இவற்றுள் 231 திருத்தலங்களில் தேவாரப் பதிகங்களைத் திருஞானசம்பந்தர் பாடிமகிழ்ந்தார். திருத்தலங்களை மனதால் துதித்து வழிபடும் நிலையினை,

**வந்து சேர்விடம் வானவ ரெத்திசையுந்**
**நிறைந் துவலஞ் செய்து மாமலர்**
**புந்திசெய்திறைஞ் சிப்பொழி பூந்தராய் போற்றுதுமே. (திருஞான. தே.3:2, பா: 1)**

என்று வரும் திருப்பூந்தராய் பதிகப் பாடலடிகள் புலப்படுத்துகின்றது. தேவாரம் பாடல்பெற்ற 275 திருத்தலங்களில் 231 தலங்களைத் தரிசிக்க ஞானசம்பந்த பெருமான் ஏழு திருத்தல யாத்திரைகளை மேற்கொண்டார்.

**அட்டவணை 1: திருஞானசம்பந்தர் சென்ற திருத்தல யாத்திரை எண்ணிக்கை**

| யாத்திரை | திருத்தலங்களின் எண்ணிக்கை |
|---|---|
| 1 | 1 |
| 2 | 7 |
| 3 | 5 |
| 4 | 21 |
| 5 | 170 |
| 6 | 49 |
| 7 | 1 |

**யாத்திரியின் தொன்மை**

திருஞானசம்பந்தரின் பதிகங்கள் அனைத்தும் தமிழகம் முழுவதும் உள்ள சிவன் கோயில்களைத் தொடர்புக் கொண்டவை ஆகும். தேவார முறைமையில் கிடைத்துள்ளப் பதிகங்களின் தலவரலாற்றினை நோக்குங்கால் திருஞானசம்பந்தர் 219 திருத்தலங்களுக்கு நேரில் சென்று பதிகங்களைப் பாடியருளியதை அறியமுடிகின்றது. இப்பதிங்களில் நிறைந்துள்ள செந்தமிழும், பண்ணமைப்பும் தொன்மைக் கருத்துக்களும் அத்தலங்களுக்குச் சிறப்புச் சேர்க்கின்றன. இதனை,

**நறவார் புகலி ஞான சம்பந்தன்**
**செறுவார் செம்பொன் பள்ளி மேயானைப்**
**பெறுமா றிசையாற் பாட லிவைபத்தும்**
**உறுமா சொல்ல வோங்கி வாழ்வரே. (திருஞான. தே. 1:25, பா: 11)**

Pandian Tamil Journal of Temple Studies
A Peer-Reviewed Journal
Volume 6, Issue 1, November 2025 E-ISSN: 2583-0880

என்னும் திருக்கடைக்காப்பு அடிகள் மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது. மேலும், மெய்ஞ்ஞானத் தத்துவங்களையும் சமயக் கருத்துக்களையும் பதிகங்களில் பாடியுள்ளதையும் காணமுடிகின்றது. இவர்தம் மேற்கொண்ட தல யாத்திரையின் அறநெறிப் பற்றி,

> **நாட்டிலே வறுமை, பசி, பஞ்சம், நோய், பிணி, இயற்கை சீர் அழிவுகள் போன்றவை நேராவண்ணம் மக்கள் நன்கு வாழ வேண்டுமானால், திருக்கோயில்களில் வழிபாடுகள் செம்மையாக நடைபெறுதல் வேண்டும் என்பதைத் தமிழ் ஞானசம்பந்தர் கொள்கையாகவும், குறிக்கோனாகவும் கொண்டு தலயாத்திரை மேற்கொண்டார் என்னும் உண்மை திருத்தொண்டர் புராணம் மூலம் உணர்த்தப் பெறுகின்றது." (ஸ்ரீதர், பக் .126)**

என்று திருஞானசம்பந்தரின் தலயாத்திரை அறநெறிக் குறித்து ஸ்ரீதர் அவர்கள் எடுத்துரைப்பதன் மூலம் புலனாகின்றது. திருக்கோயில்களின் சிறப்பினை எடுத்துக் கூறுவதோடு சிவன் உறையும் பதிகள் குறித்தும், அதனை நாளும் வழிப்படுவதால் இறைவனின் திருவடிகளை அடையும் நெறி குறித்தும் வலியுறுத்தியுள்ளார். உலகத்தில் பல்வேறு பகுதிகளிலும் ஆலயம் அமைத்து வழிபாடு நடைபெற்றுள்ளதை பன்னிரு திருமுறைகள் குறிப்பிடுகின்றன. ஆலய வழிபாட்டின் சிறப்பினை, **“அன்பரும் அமைத்த சிந்தை ஆலயத்து அரனார் தம்மை.” (திருத்.புரா.12.71பா:17)** என்ற வரியின் மூலம் சேக்கிழார் கோயில்களின் தொன்மைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளதை அறிந்துகொள்ள முடிகின்றது. தெய்வச் சேக்கிழார் பெருமான் குறிப்பிட்டதைப் போலவே திருநாவுக்கரச நாயானரும் சிவபெருமான் உறையும் கோயில்களின் வகைகளை குறிப்பிட்டுள்ளார். இதனை,

> **பெருங்கோயில் எழுபதினோ டெட்டும் மற்றுங்**
> **கரக்கோயில் கடிபொழில்சூழ் ஞாழற் கோயில்**
> **கருப்பறியல் பொருப்பனைய கொகுடிக் கோயில்**
> **இருக்கோதி மறையவர்கள் வழிபட் டேத்தும்**
> **இளங்கோயில் மணிக்கோயில் ஆலக் கோயில் (திருநாவு. தே. 6.71. பா: 5)**

என்று வரும் பதிக பாடலடிகளின் மூலம் உயிர்களின் தீவினைகள் நீங்குவதற்கு திருக்கோயில்களில் வழிபாடு மேற்கொள்வது குறித்து அறியமுடிகின்றது. மேலும், திருநாவுக்கரசர் கோயில் இல்லாத ஊரினைக் 'காடு' என்று குறிப்பிடுகின்றார். இதனை, **“அவையெல்லாம் ஊரல்ல அடவி காடே.” (திருநாவு. தே. 6. 95. பா: 5)** என்று வரும் பதிகத்தில் சுட்டிக்காட்டியுள்ளது இங்கு உற்றுநோக்கத்தக்கதாக அமைகின்றது. கோயில்கள் பெருகவும், அத்திருத்தலங்களுக்கு மக்கள் யாத்திரைகள் பலவும் மேற்கொள்ளவும், அத்தல இறைவனை வழிபடுதல் வேண்டும் என்பதையும் திருஞானசம்பந்தர் பதிகங்களில் எடுத்துரைத்துள்ளார்.

**திருஞானசம்பந்தரின் தலயாத்திரை முறைமை**

உலகில் காணும் காட்சிகள் யாவையும் பரம்பொருளாகவே காண்பதால் சிவபெருமானுக்குத் தலம் அமைத்து அதில் சிவ மூர்த்தம் மட்டும் இறைவன் என கொள்ளாமல் தலம் முழுவதுமே சிவன் என கொண்டார் திருஞானசம்பந்தர். மூன்று வயதில் திருநிலைநாயகியிடம் பொற்கிணத்தில் ஞானப்பால் அருந்திய நாள் தொடங்கி அவரது பதினாறாம் வயது வரை ஏழு திருத்தலயாத்திரைகளை மேற்கொண்டுள்ளார். இவர்தம் தலயாத்திரை முறைமைக் குறித்து,

> **திருஞானசம்பந்தரின் தலயாத்திரையானது பதின்மூன்று ஆண்டுகளாக இடம்பெற்றிருந்தது. அவர் சைவசமய மறுமலர்ச்சிக்காக யாத்திரை செய்ய ஆரம்பித்த காலச் சூழலானது, அரச ஆதரவுடன் சமண சமயம் மேலெழுச்சி பெற்றிருந்த காலமாகும். பல்லவ மன்னர்களும் பெரும்பாலான மக்களும் சமண நெறியினைப்**

> **பின்பற்றியொழுகினர். இவ்வாறான புறச் சமயச் சூழலில் அதுவும் பால்ய வயதிலேயே மிக்க ஆளுமையுடைய ஒருவராக சம்பந்தர் தனது பக்தி நடவடிக்கைகளை முன்னெடுக்க முயன்றிருக்கின்றார். வயது மட்டும் ஒருவருடைய ஆளுமையைத் தீர்மானிப்பதில்லை. மனப் பக்குவமும், இறைபற்றும், உறுதியான நம்பிக்கையும், திட்டப் பாங்கான செயற்பாடுகளுமே ஆளுமையின ஊற்றிடங்களாக உள்ளன என்பதனை சம்பந்தரின் வாழ்வியலை அறிந்து கொள்பவர்கள் யாவரும் தெளிவாக விளங்கிக் கொள்வர்." (முனைவர் ரமணராஜா, பக். 8)**

என்று குறிப்பிடுகின்றார். மேலும், இக்கருத்துக்களின் வழி சைவ சமயத்தினை மேலோங்க செய்ய அவர்தம் தலயாத்திரையின் பங்கினை அறியமுடிகின்றது.

பரசமயகோளரியான பெருமான் மக்களுடன் கூட்டம் கூட்டமாக இறைவனைத் திருத்தலங்கள் தோறும் சென்றுப் பாடிமகிழ்ந்தார். திருஞானசம்பந்தர் இருவகையான யாத்திரை முறைகளை மேற்கொண்டார் என்பதை, **"ஒருவகைத் திட்டத்துடனும் முறையுடனும் கூடிய இவரது ஏழுயாத்திரைகளும் இவர் பிறந்த பதியாகிய சீகாழித் தலத்தை மையமாகக் கொண்டே அமைந்துள்ளன." (தேவார மூவர் தலயாத்திரை - ஓர் ஆய்வு, ப. 9)**
என்று சிவகுருநாதப் பிள்ளை குறிப்பிடுவதிலிருந்து அறிந்துகொள்ள முடிகின்றது. இத்தகு சிறப்பு வாய்ந்த சீகாழிப் பதியின் அமைப்புக் குறித்து,

> **நாற்புரமும் ஆறுகளும், கடலும் சூழ்ந்து சீர்காழி வட்டத்தை ஒரு தீவாக ஆக்கியுள்ளன. கிழக்கு எல்லையாக கொடியம்பாளையம் முதல் பூம்புகார் வரையிலும் வங்கக் கடல் பரவி நிற்கிறது. வடக்கு எல்லையாகவும், வடமேற்கு எல்லையாகவும் கொள்ளிடம் நதி ஓடுகிறது. மேற்கே பழவாறும், தென்கிழக்கே காவிரி நதியும் எல்லைகளாக அமைந்துள்ளன. கொள்ளிடம், வங்கக் கடலில் சங்கமமாகும் இடத்தருகே உள்ள கொடியம்பாளையம், கொட்டயமேடு ஆகிய ஊர்கள் சீர்காழி வட்டத்தின் தீவுகளாகும். (கோயில் பண்பாடு, ப. 25)**

என்று செல்வராசு அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளதைக் காணமுடிகின்றது. மேலும், ஒவ்வொரு முறையும் திருத்தல யாத்திரை மேற்கொள்ளும் பொழுது சீகாழிப் பதியையே முதலில் பாடித் தொடங்கியவர் புறப்பட்ட இடத்திலிருந்து குறிப்பிட்ட இடத்திற்கு சென்று சேரும் வரையும் ஒரு தலத்தினைக் கூட விடாமல் தரிசித்து வந்தார் என்பதையும் இதன் மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது.

**திருத்தல யாத்திரைகள்**

பக்தி இயக்கத்தின் முன்னோடியாக விளங்கும் காரைக்கால் அம்மையார் தான் திருத்தல யாத்திரைகளின் முன்னோடியாகவும் கருதப்படுகிறார். இருப்பினும் தேவார மூவர் அதிக அளவில் தலங்களை நேரில் தரிசித்து அத்தல இறைவன் மீது எண்ணற்ற பதிகங்களைப் பாடியருளியுள்ளதைத் முதல் மூன்று திருமுறைப்பதிகங்கள் உணர்த்துகின்றன. தேவாரம் மூவருள் சமகாலத்தவர்களாகக் கருதப்படும் ஞானசம்பந்தரும் நாவுக்கரசரும் இணைந்துச் சென்று பல்வேறு தலங்களைத் தரிசித்தனர். தமிழகத்தின் இருண்ட காலகட்டத்தில் சைவ சமயத்தின் மறுமலர்ச்சிக்காக முறையான திட்டமிடலுடன் இத்திருத்தல யாத்திரையினை முன்னெடுத்தவர்களுள் முதன்மையானவர் ஞானசம்பந்தப் பெருமானே ஆவார். இந்நிலவுலகில் பதினாறு ஆண்டுகள் மட்டுமே வாழ்ந்த சம்பந்தர் ஏழு திருத்தல யாத்திரைகளை மேற்கொண்டுள்ளார். திருப்பிரமபுரம் பதியில் உமையம்மையிடம் ஞானப்பால் அருந்திய இரவே அந்நிகழ்வினை எண்ணி அதே நினைவில் மறுநாள் காலை சீகாழிப்பதி இறைவன் மீது பதிகம் பாடி வழிபட்டார். அதன் பிறகு, சீகாழிப் பதியிலிருந்து திருக்கோலக்கா பதியினை

அடைந்து, அத்தல இறைவன் மீது பதிகம் பாடிய பின்னர் இறைவனும் இறைவியும் பொற்றாளம் அளித்தார்கள். இதனை,

**நலங்கொள் காழி ஞான சம்பந்தன்**
**உலங்கொள் வினைபோய் ஓங்கி வாழ்வரே. (திருஞான.தே.1: 23. பா: 11)**

என்ற பதிகப் பாடல் வழி காணமுடிகின்றது. இந்நிகழ்வு குறித்து, சுந்தரர் ஏழாம் திருமுறையில்,

**நாளும் இன்னிசை யாற்றமிழ் பரப்பும்**
**ஞான சம்பந்த னுக்குல கவர்முன்**
**தாளம் ஈந்தவன் பாடலுக் கிரங்குந் (சுந். தே. 7. 62. பா: 8)**

என்ற பாடலடிகளின் வழி திருஞானசம்பந்தர் பொற்றாளம் பெற்றதைக் குறிப்பிடுகின்றார். திருக்கோலக்காவிலிருந்து சீகாழிப் பதியினை அடைந்தார். பொற்றாளம் பெறுவதற்கு முன்புவரையிலும் கைகளிலே தாளம் தட்டி பண்ணமைத்துப் பதிகங்களைப் பாடியே அருளியுள்ளார் என்பதை இந்நிகழ்வுகள் புலப்படுத்துகின்றது.

**இரண்டாவது தலயாத்திரை**

திருஞானசம்பந்தர் திருத்தலங்கள் தோறும் சென்று பதிகம் பாடி வழிபடுவதை அறிந்த மக்கள் கூட்டம் கூட்டமாக வந்து வழிபாட்டில் பங்கேற்றனர். சிறு வயதில் இறைவனை உயர்ந்த சமயக் கருத்துக்களால் இசையோடு பாடுவதைக் கேட்டு மகிழ்ந்தனர். சீகாழிப் பதியில் தொடங்கிய இரண்டாவது தலயாத்திரை திருநனிப்பள்ளி, தலைச்சங்காடு, திருவலம்புரம், காவேரிபூம்பட்டினம், திருச்சாய்க்காடு, திருவெண்காடு, திருமுல்லைவாயில் ஆகிய காவிரி வடகரைத் தலங்களைத் தரிசித்துப் பின்பு சீகாழிப் பதிக்கு எழுந்தருளினார். இறைவனின் பெருங்கருணையினால் மக்கள் வாழ இயலாத திருநனிபள்ளியின் பாலை நிலத்தினை நெய்தல் நிலமாக மாற்றிப் பாடினார். அவ்வாறே அந்நிலம் மாறிற்று என்பதை நம்பியாண்டார் நம்பி குறிப்பிடுவதிலிருந்து அறிந்துகொள்ள முடிகின்றது. மேலும், இப்பதிகத்தின் திருக்கடைக்காப்பு பாடலில் ஆணையிட்டுப் பாடும் மரபினை அமைத்து பாடியுள்ளமைப் புதிய நெறியாக அமைந்துள்ளது. இதனை, **“வினைகெடுதல் ஆணை நமதே.” (திருஞான. தே. 2: 84. பா: 11)** என்ற பதிகப் பாடலடிகளின் வழி அறிந்துகொள்ள முடிகின்றது. இக்கருத்தினை,

> **ஈசன், "நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தனுக்கு உலகவர் முன் தாளம் ஈந்து அவன் பாடலுக்கு இரங்கும் தன்மையாளன்" என்பர் சுந்தரர்.' சம்பந்தர், திருக்கோலக்காவில் தாளம் பெற்ற செய்தியை, நினைப்பூட்டும் நெறியில் முதல் மாறவர்மன் சுந்தரபாண்டியனுடைய குடுமியான் மலைக் கல்வெட்டில், 'தாளம் பெற்றான் குடிக்காடு" என்று ஒரு நிலப் பகுதி குறிக்கப் பெற்றுள்ளது. (கல்வெட்டில் தேவார மூவர், ப. 13)**

என்று வேங்கடராமையா அவர்கள் கல்வெட்டு சான்றுகளுடன் குறிப்பிடுவது ஒப்புநோக்கத்தக்கதாக அமைகின்றது.

**மூன்றாவது தலயாத்திரை**

திருஞானசம்பந்தர் சீகாழிப் பதியிலிருந்து தொடங்கி திருமயேந்திரப்பள்ளி, திருகுருகாவூர், வெள்ளடை, திருக்கலிக்காமூர் பதிகளைத் தரிசித்தார். அதன் பின்னர், திருநீலகண்ட யாழ்ப்பாணரும் அவரது மனைவி மதங்கசூளாமணியாரும் திருஞானசம்பந்தருடன் இணைந்து தலங்களைத் தரிசித்தனர். பாணர் மரபில் வந்த திருநீலகண்டயாழ்பாணர் பதிகங்களுக்கு யாழிசைப்பதைக் கேட்டு ஊரார் மகிழ்ச்சி அடைந்தனர். இந்நிகழ்வு அனைத்து குலமக்களும் ஒன்று என்பதற்குச் சான்றாக அமைகின்றன. இதனை,

**திரு நீலகண்டத்துப் பெரும் பாணர் தெள் அமுதின்**

Volume 6, Issue 1, November 2025 E-ISSN: 2583-0880

**வருநீர்மை இசைப்பாட்டு மதங்க சூளாமணியார் (திருத். புரா. 12. 34. பா: 131)**

என்ற பாடலின் மூலம் சேக்கிழார் பெருமான் குறிப்பிடுவது ஒப்புநோக்கத்தக்கதாகும். திருநீலகண்டயாழ்பாணருடன் திருவேட்களத்தில் தங்கியிருந்த ஞானசம்பந்தர் தில்லையம்பதியினை தரிசிக்க சென்ற நிகழ்வினை,

> **திருவேட்களத்தில் தங்கியிருக்கும்போது ஒருநாள் திருநீலகண்டயாழ்ப்பாணர் தில்லையம்பலத்தில் திருநடனம் புரிந்தருளும் திருவடிகளை அணுகிப்போற்றும் பேற்றினை விரும்புகின்றார். பாணனாரின் ஒழுக்கத்தின் விழுப்பத்தினை எண்ணிய பிள்ளையார் அன்பு நிறைந்த உள்ளத்தினராய்ப் பாணனாரை உடன் அழைத்துக் கொண்டு தில்லையம்பதிக்கு வருகின்றார். இந்நிலையில் கூத்தப்பெருமான் அருளால், தில்லை மூவாயிரவரும் சிவகணநாதர்களாய்த் தம் எதிரே தோன்றுகின்றனர். இவ்வழகிய காட்சியைப் பிள்ளையார் பெரும்பாணருக்குக் காட்டியருள்கின்றார். (ஞானசம்பந்தர், ப. 34)**

என்று ந. சுப்புரெட்டியார் அவர்கள் அழகுற எடுத்துக்காட்டுகின்றார்.

**நான்காவது தலயாத்திரை**

திருஞானசம்பந்தரின் நான்காவது தல யாத்திரை சிதம்பரம் பதியில் தொடங்குகிறது. தில்லை, திருவேட்களம், கழிப்பாலை, நெல்வாயில், எருக்கத்தம்புலியூர் தொடர்ந்து முதுகுன்றம், தூங்காணைமாடம், நெல்வாயில் அரத்துறை என பலத்தலங்கள் சென்று மீண்டும் சீகாழி வருகிறார். சம்பந்தர் நடுநாட்டில் 15 தலங்கள் பாடியுள்ளார். அத்தலங்களின் இறைவனை வழிபடும்போது பதிகத்தில் பல்வேறு வகையான வழிபாட்டு முறைகளை குறிப்பிடுகின்றார். இச்செய்தியினை,

> **இத்தலத் தேவாரங்களுள் வழிபாடு என்பது பல்வேறு கோணங்களில் சம்பந்தரால்பேசப்படுகிறது. மலர் தூவி வழிபடல், மொழியால் வழிபாடு என்பது பல்வேறு கோணங் இசையால் பாடி வழிபடல், ஆடி வழிபடல், வானவர் வழிபாடு இயற்றல், வழிபாட்டால் பெறும் பயன், பதட்டம் தீர்க்கும் வழிபாடு என வழிபாடு பல்வேறு பரிமாணங்களைப் பெறுகிறது. (கோ.ப.நல்லசிவம், பக். 331)**

என்று அவர் குறிப்பிடுவதன் வழி அறிந்துகொள்ளமுடிகின்றது. திருஞானசம்பந்தர் திருநெல்வாயில் அரத்துறை நோக்கி நடந்து வந்தார். இடையில் தங்கி மறுநாள் காலை திருக்கோயிலுக்குச் செல்லும் பொழுது இறைவன் முத்துச்சிவிகை, குடை, சின்னங்களை ஞானசம்பந்தருக்கு அளித்தார். இதனை,

> **முத்து நிரைச் சிவிகையின் மேல் மணியை வந்து**
> **முறை பணிந்து புகுந்தபடி மொழிந்து நின்றார். (திருத். புரா. 12. 34. பா: 907)**

என்ற பாடல் வரிகளின் வழி சின்னங்கள், சிவிகை அளித்ததைச் சேக்கிழார் பெருமான் குறிப்பிட்டுள்ளார். மேலும், டாக்டர் சோமசுந்தரம் அவர்கள்,

> **திருஞானசம்பந்தருக்கு இறைவன் முத்துச்சிவிகை (பல்லக்கு), முத்துக்குடை, முத்துச்சின்னம் ஆகியவற்றைத் தந்தருளிய தலம். அரத்துறை என்பது ஆலயத்தின் பெயர். நெல்வயல்கள் சூழ்ந்து விளங்குவதால் இது நெல்வாயில் எனப்பட்டது. (சம்பந்தர் காட்டும் திருத்தலக் காட்சிகள், ப. 395)**

என்ற வரிகளின் மூலம் எடுத்துக்காட்டுகின்றார். நான்காவது தலயாத்திரையின் நிறைவில் திருஞானசம்பந்தருக்கு உபநயனச் சடங்கு நடைபெற்றது. அச்சடங்கின் பொழுது ஐந்தெழுத்தின் பெருமையைச் சொல்லும் திருப்பஞ்சாட்சரத் திருப்பதிகத்தினைப் பாடினார். அனைத்திற்கும் ஆதியாக விளங்கும் திருவைந்தெழுத்தினை,

> **மந்திர நான்மறை யாகி வானவர்....**

Volume 6, Issue 1, November 2025 E-ISSN: 2583-0880

**கந்தியுள் மந்திரம் அஞ்செ ழுத்துமே. (திருஞான. தே. 3: 22. பா: 2)**

என்று பதிகத்தில் ஐந்தெழுத்து மந்திரம் அனைத்திற்கும் மூலம் என்பதை விளக்கிக்காட்டுகின்றார். மூன்றாம் ஆண்டு தொடங்கி ஏழாம் ஆண்டு வரையில் நான்கு தலயாத்திரைகளை மேற்கொண்டு 78 பதிகங்களைப் பாடியுள்ளார் என்பதை அறிந்துகொள்ள முடிகின்றது.

**ஐந்தாவது தலயாத்திரை**

சீகாழிப் பதியிலிருந்து தொடங்கிய ஐந்தாவது தலயாத்திரை ஏறத்தாழ ஏழு ஆண்டுகாலம் அமைகின்றது. இக்காலகட்டத்தில் கொங்கு நாடு, சோழநாடு, பாண்டியநாடு ஆகிய பெரும்பகுதிகளைப் பாடியருளினார். மொத்தம் 127 பதிகங்களை திருஞானசம்பந்தர் பாடியதாக மூன்றாம் திருமுறை நமக்குச் சான்றுப் பகர்கின்றன. திருநாவுக்கரசரின் சமகாலத்தவரான திருஞானசம்பந்தர் தமது ஐந்தாவது தலயாத்திரையின் போது திருப்புகலூர்த் தல இறைவனை வணங்கி முருகநாயனாரைப் போற்றிப் பதிகம் பாடினார். அதன்பின்னர், திருவாரூரில் திருநாவுக்கரச நாயனார் தங்கியிருந்த செய்தியினைக் கேட்டு,

> **ஊர் எல்லை வரை சென்று அப்பரைக் கண்டு மகிழ்ந்து உரையாடினார். தாமும் திருவாரூர் சென்று இறைவனை வணங்கி, மீண்டும் அப்பரடிகளைச் சந்திப்பதாகக் கூறி விடைபெற்றார். (இந்திய இலக்கியச் சிற்பிகள் திருஞானசம்பந்தர், ப. 22)**

என்று சு. வேங்கடராமன் குறிப்பிடுகிறார். யாத்திரை மீண்டும் தொடரும் பொழுது பல்வேறு அற்புதத் திருப்பதிகங்களையும் நிகழ்வுகளையும் அருளிச்செய்ததைக் காணமுடிகின்றது.

**ஆறாவது தலயாத்திரை**

ஆறாவது தலயாத்திரையும் நீண்ட தல யாத்திரையாக அமைந்தது. தல யாத்திரையின் போது அத்தலத்தின் இயற்கைச் சூழலையும் இறைவனையும் அழகுற பண்ணமைத்துப் பாடியுள்ளார். இது குறித்து,

> **சம்பந்தர் பாடல்களில் காணப்படுகின்ற பொதுப்பண்புகளை நோக்குமிடத்து அவரது நோக்கம் தென்படுகிறது. அவரது பாடல்களில் ஒவ்வொன்றிலும் பெரும்பான்மையாக இரண்டு வரிகளாவது இயற்கையை வர்ணித்து பாடுபவையாக அமைந்துள்ளன. இறைவனைப் பற்றி இரண்டு வரிகள் அமைக்கப்பட்டிருக்கும். மற்றும் தான் பாடுகின்ற தலத்தின் சூழலை அவர் அழகுணர்வோடு பாடல்களில் அமைந்துள்ளமை சிறப்பானதாகும். 384 பதிகங்கள் 23 பண்களில் அமைந்துள்ளன. செந்துருத்தி பண்ணில் மட்டும் அவர் தேவாரம் இயற்றவில்லை. (பரமேஸ்வரி கணேசகம்பர், பக்.389-390)**

என்று அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளது இங்கு உற்றுநோக்கத்தக்கதாக அமைகின்றது. இந்த நீண்ட தல யாத்திரையில் பல்வேறு அற்புத நிகழ்வுகள் நிகழ்த்தியிருந்தாலும் கபாலீச்சரத்தில் பாம்புத் தீண்டி இறந்த பூம்பாவையின் உயிரை,

> **மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலைக்**
> **கட்டிட்டங் கொண்டான் கபாலீச் சரம்அமர்ந்தான்**
> **ஒட்டிட்ட பண்பின் உருத்திர பல்கணத்தார்க்**
> **கட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய். (திருஞான.தே. 2. 47. பா: 1)**

என்று வரும் பதிகத்தினைப் பாடிப் பூம்பாவையை மீண்டும் உயிர்ப்பித்தார் இச்செய்தி பற்றி,

> **மயிலாப்பூர் வந்து, கோயில் சென்று இறைவனை வணங்கிவிட்டு 'மட்டு இட்ட புன்னை' (சம்பந்தர் தேவாரம் 338) என்று பதிகம் பாடினார். இப்பதிகத்தின் ஒவ்வொரு பாடலிலும் நான்காம் அடியில் 'காணாதே போதியோ பூம்பாவாய்' என்று இடம்பெறுகிறது. இறை அருளால் எலும்புகள் கூடி உயிர் பெற்று 12 வயதுடைய பெண் உருப்பெற்று, குடத்தை உடைத்துக் கொண்டு வெளியே வந்தாள். இறைவனின்**

> **கருணையைக் கண்டு சம்பந்தர் மகிழ்ந்தார்; இறைவனைப் போற்றினார்." (இந்திய இலக்கியச் சிற்பிகள் திருஞானசம்பந்தர், ப. 31)**

என்று வேங்கட்ராமன் அவர்கள் திருஞானசம்பந்தரின் ஆறாவது தல யாத்திரை பகுதியில் பூம்பாவையை உயிர்ப்பித்தது குறித்து பதிவு செய்துள்ளதைக் காணமுடிகின்றது.

ஆண் பனை மரத்தினை பெண் பனையாக மாற்றினார். சமணர்களுடன் வாது புரிந்து வென்றது என இறைவனை வணங்கி 89 பதிகங்களைப் பாடினார். யாத்திரையின் போது திருக்காளத்தியில் இருந்தவாறே கைலாயம், கேதாரம் போன்ற வடநாட்டுத் தலங்களையும் பாடினார். மீண்டும் சீகாழிப் பதியினை அடைந்த சம்பந்தருக்குத் திருமண வயது வரவே திருநல்லூர்ப்பெருமணத்தில் நம்பாண்டார் நம்பி என்பவரின் மகளை மணம் பேசி திருமணம் முடிவுசெய்தனர்.

**ஏழாவது தலயாத்திரையும் திருமணச் சோதியில் கலத்தலும்**

ஞானசம்பந்தப் பெருமான் உலகப் பற்றுக்களை விடுத்து இறைவனை மட்டுமே நாளும் எண்ண வேண்டும் என்பதை விரும்பினார். ஆயினும், பெற்றோரின் வாக்கிற்கிணங்கி மணந்து கொள்ளச் சம்மதம் தெரிவித்தார். சீகாழியிலிருந்து புறப்பட்டு திருநல்லூர்ப்பெருமணப் பதியை அடைந்தார். வைகாசி மூல நன்னாளில் திருமணச் சடங்குகள் அனைத்தும் நிகழ்ந்தன. மணமகளின் கையை பற்றிய வண்ணம் திருமணக் கோலத்தில், **"கல்லூர்ப் பெருமணம் வேண்டா கழுமலம்" (திருஞான. தே. 3: 125. பா: 1)** என்று தொடங்கும் பதிகத்தினைப் பாடிருளியதைக் காணமுடிகின்றது. திருமணத்திற்குப் பின்பு இறைவனுடன் சோதியில் கலந்த நிகழ்வுகளைத் திருத்தொண்டர் புராணம் குறிப்பிடுகின்றது.

**முடிவுரை**

உலகில் அசையும் பொருட்கள் அசையா பொருட்கள் அனைத்திலும் சிவபெருமானது காட்சியினை அகமகிழக்கண்டு அதனை பாடியவர் திருஞானசம்பந்தர். நலிந்துக் கொண்டிருக்கும் சைவ சமயத்தின் வளர்ச்சியை நிலைநாட்டவும் சிவபெருமானது திருவடிப் பேற்றினை உலகமக்கள் எண்ணி இன்புற்று உய்யவும் திருமுறைகளைப் பாடி மகிழ்ந்தார். நாளும் திருத்தலங்கள் தோறும் சென்று மனம்மகிழ இறைவனை வணங்கிப் பதிகங்களை இயற்றினார். சைவ சித்தாந்தக் கருத்துக்கள் இறைவனின் திருவடியினை சேர்தலே நிலையானது என்று கூறுகின்றது. அதனை, திருக்கடைக்காப்புப் பாடல்கள் போற்றுகின்றன. இறைவனை திருத்தலங்களுக்குச் சென்று வழிபடுவதினால் வினை நீங்கி இன்பம் பெருகும் என்றும், இறைவழிபாட்டின் வழி தெய்வக்காட்சியினைத் தலங்களில் வழிபடலாம் என்பதையும் குறிப்பிட்டுள்ளார். இறைவன் இன்னின்ன தலங்களில் இவ்வாறு உறைகின்றான் என்பதும் அவனது திருவுள்ளத்திற்கு எந்தெந்த தலங்கள் சிறந்தது என்பதையும் இக்கட்டுரையின் வழி அறிந்துகொள்ள முடிகின்றது. திருநீற்றுச் சிறப்பினையும் ஒரு திருத்தலத்திலிருந்து மற்றொரு தலத்திற்குச் சென்று வழிபடுவதையும் குறிப்பிட்டுள்ளார். இறைவனின் திருவருளினை எண்ணி உலகமக்கள் அனைவரும் இன்புற்று வாழும் அற்புதங்களை இக்கட்டுரை எடுத்துரைக்கின்றது. மேலும், திருஞானசம்பந்தரின் வழி நின்று இயன்ற அளவிற்கு தேவாரப் பாடல் பெற்றத் திருத்தலங்களுக்கு நேரில் சென்று வணங்கி உழவாரப்பணி செய்து இறையருளினைப் பெற்று அவனின் திருவடியை அடைந்து இன்ப வாழ்வினைப் பெறுவோம்.

**குறிப்புகள்**

[1] சிவகுருநாதப் பிள்ளை, மா. *தேவார மூவர் தலயாத்திரை - ஓர் ஆய்வு.* யு.சுப்பிரமணியன் அறக்கட்டளை, தஞ்சாவூர் - 613 007, முதற் பதிப்பு - 1990.

Volume 6, Issue 1, November 2025 E-ISSN: 2583-0880

[2] சுப்பு ரெட்டியார், ந. *ஞானசம்பந்தர்.* வேங்கடம் பதிப்பகம், சென்னை - 600 040, 1986.

[3] செல்வராசு, நா. *கோயில் பண்பாடு.* அனிச்சம் இலக்கிய வட்டம், புதுச்சேரி - 605 005, 1999.

[4] சோமசுந்தரம், பி. எஸ். *சம்பந்தர் காட்டும் திருத்தலக் காட்சிகள்.* எஸ் கே பதிப்பகம், சென்னை - 600 017, முதற் பதிப்பு - டிசம்பர் 2019.

[5] தருமை ஆதீனம் (ப.குழு). *திருஞானசம்பந்தர் தேவாரம், பன்னிரு திருமுறைகள் (முழுவதும்),* தருமை ஆதீனம், ஞானசம்பந்தம் பதிப்பகம், மயிலாடுதுறை - 609001, 2023.

[6] தருமை ஆதீனம் (ப.குழு). *திருநாவுக்கரசர் தேவாரம், பன்னிரு திருமுறைகள் (முழுவதும்),* தருமை ஆதீனம், ஞானசம்பந்தம் பதிப்பகம், மயிலாடுதுறை - 609001, முதற் பதிப்பு - 2023.

[7] தருமை ஆதீனம் (ப.குழு). *சுந்தரர் தேவாரம், பன்னிரு திருமுறைகள் (முழுவதும்),* தருமை ஆதீனம், ஞானசம்பந்தம் பதிப்பகம், மயிலாடுதுறை - 609001, முதற் பதிப்பு - 2023.

[8] நல்லசிவம்,கோ.ப. *"நடுநாட்டுத் திருப்பதிகங்களில் வழிபாடு." திருஞானசம்பந்தர் ஆய்வுமாலை தொகுதி ஒன்று,* திருஞானசம்பந்தர் ஆய்வு மாநாடு வெளியீடு, காசித்திருமடம், திருப்பனந்தாள் - 612 504, முதற் பதிப்பு - 2002, பக்: 331-335.

[9] பரமேஸ்வரிகணேசகம்பர். "திருஞானசம்பந்தர் தேவாரங்களில் இசையணிகள் ஓர் நோக்கு." *பிரணவ் நுன்களை ஆய்விதழ்,* E-ISSN: 2582-9513, தொகுதி - 1, இதழ் - 4, மார்ச் - 2023, பக்: 389-393.

[10] மருதை & இசக் சாமுவேல். "சுந்தரர் தேவாரத்தில் காணப்படும் சிவநெறி ஒழுக்கங்கள்." *வளர்தமிழ் ஆய்விதழ்,* E-ISSN: 2821-3157, தொகுதி - 2, இதழ் - 2, செப்டம்பர் - 2021.DOI: 10.37134/ பக்: 14-29.

[11] முருகவேள், ந.ரா. (உ.ஆ) *சிவஞானபோதம் (தெளிபொருள்).* தருமை ஆதீனம், ஞானசம்பந்தம் பதிப்பகம், மயிலாடுதுறை - 609001, முதற் பதிப்பு - 2025.

[12] ரமணராஜா, எஸ். *"சைவப்பண்பாட்டு மரபில் திருஞானசம்பந்தரின் தலயாத்திரை: ஓர் நோக்கு." களஞ்சியம் சர்வதேச தமிழ் ஆய்விதழ்,* E-ISSN: 2456-5148, தொகுதி - 5, சிறப்பிதழ் - 5 - 1, டிசம்பர் - 2024, பக்: 6-25.

[13] வேங்கடசாமி நாட்டார்,ந.மு. (உ.ஆ) கொன்றை வேந்தன், கௌரா பதிப்பகம், திருச்சி - 620 001, முதற் பதிப்பு - 2021.

[14] வேங்கடராமையா, கா. ம. *கல்வெட்டில் தேவார மூவர்.* சேகர் பதிப்பகம், சென்னை, 2005.

[15] வேங்கடராமன், சு. *இந்திய இலக்கியச் சிற்பிகள் திருஞானசம்பந்தர்.* சாகித்திய அகாதெமி, இரவீந்திர பவன், புது தில்லி - 110 001, மூன்றாம் பதிப்பு- 2018.

[16] ஸ்ரீதர், மோ. "*தலயாத்திரையில் திருஞானசம்பந்தரின் அறநெறி." இனம் பல்துறைப் பன்னாட்டு இணைய தமிழாய்விதழ்,* E-ISSN: 2455-0531, தொகுதி - 8, இதழ் - 32, நவம்பர் - 2022, பக்: 125-129.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.